விலை ரூபா:10.00

# வலம்புரி
Valampurii

புக்கங்கள்:ஆறு




சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 30 சனிக்கிழமை (14.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

## கிளைமோர் தாக்குதலில் சிக்கி பாடசாலை அதிபர் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை வீதியில் நெல்லண்டையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் அதிபர் ஒருவர் பலியானார்.

தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலய அதிபரான மணியம் கணபதிப்பிள்ளை (வயது 56) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் தனது வீட்டுக்கு அருகிலுள்ள வீரகாளி அம்மன் கோவிலுக்கு சென்று வணங்கி விட்டுத்திரும்பும் வழியிலேயே இச்சம்பவத்தில் சிக்கியுள்ளார்.

எனினும் இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் தூதுவரை வெளியேற்ற அரசாங்கத் தரப்பில் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜுர்ஜென் வீர்த்தை வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


கொழும்பு ஹில்டன் நட்சத்திர விடுதியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜேர்மன் தூதுவர் அண்மையில் இரவு நேரத்தில் சந்தித்துள்ளார்.

அச் சந்திப்பின்போது அரசாங்கத்திற்கான நிதியுதவியை ஜேர்மன் அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டதாக தெரியவந்துள்ளது.

அதேபோல் இலங்கையின் உள்விவகாரங்கள் தொடர் (06 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பேச்சுக்கு தயாரில்லை அரசுக்கு நோர்வே அறிவிப்பு

## ஒப்பந்தம் மதிக்கப்பட்டால் சமாதானம் சாத்தியமாம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு விடுதலைப்புலிகள் தயாரில்லை என நோர்வே அறிவித்துள்ளது. அரசாங்கப் பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை சந்தித்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்ட்கர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## மாட்டீன் வீதியில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாட்டீன் வீதியில் திருக்குடும்பக் கன்னியர் மடம் கல்லூரிக்கு அண்மையாக வைத்து இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் நாவலர் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விஜேந்திரன் (வயது-19) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த (06 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலைத் தடுக்க சகல நடவடிக்கைகளும் பூர்த்தி

### அமைச்சர் ஜெயராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட முக்கிய நிலைகள் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். கிழக்கில் தேர்தல் நடத்துவது தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு மகிந்த ராஜபக்ஷ (06 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பிமலை வெற்றியை கொண்டாட பாடசாலைகளுக்குச் சுற்றுநிருபம்

### ஜனாதிபதியால் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

குடும்பிமலையை ஆக்கிரமித்ததை முன்னிட்டு அதனைப் பாடசாலைகளில் தேசிய விழாவாகக் கொண்டாடுமாறு மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதுபற்றி சுற்றுநிருபங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடும்பிமலையைப் புலிகளிடமிருந்து இராணுவம் மீட்டதை தேசிய நிகழ்வாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிப்பு

கிராமிய மட்டங்களில் அதிகாரங்களைப் பரவலாக்கும் அரசியல் தீர்வொன்றை உருவாக்க சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் அரச அதிகாரிகள் குழு ஒன்று இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அக் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்த மாதம் அளவில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (ச)

## தாய்லாந்திலுள்ள தமிழ் அகதிகள் சிறைச்சாலையில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

தாய்லாந்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் தஞ்சமடைந்திருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்ற அந்நாட்டு அதிகாரிகள் அவர்களை கைது செய்து பாங்கொக்கிலுள்ள சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ளனர். இதில் குழந்தைகள் உட்பட 120 பேர் வரையிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த இவர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக தாய்லாந்துக்குத் தப்பிச்சென்றதாகக் கூறப்பட்டது. கடந்த 4 மாதங்களாக ஐ.நா. அகதிகளுக்கான தூதரகத்தில் தங்கியிருந்த தமக்கு எதுவித அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை என அம் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமது நிலை குறித்து உறவினர்கள் அறிய விரும்பினால் (06 ஆம் பக்கம் பார்க்க)

## படுவான்கரையிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு படுவான்கரையில் மீள் குடியமர்ந்தோரில் மீன் பிடிக்கச் சென்றஒருவர் காணாமல் போனதையடுத்து அப் பகுதி மக்கள் மீளவும் இடம்பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு (06 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?

## முப்படைத் தளபதி தலைமையிலான உயர்மட்டக் குழு குடும்பிமலை விஜயம்

(மட்டக்களப்பு)

முப்படைத்தளபதி எயார் சீவ் மார்சல் டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட இராணுவ உயர் நிலைக் குழுவினர் நேற்று குடும்பிமலைப் பகுதிக்கு சென்றனர்.

இராணுவக் குழுவினரை வரவேற்ற அதிகாரிகள் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து விளக்கியதுடன் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்கும் அவர்களை அழைத்துச் சென்றனர். அங்கு உயர்நிலை கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல்களில் குடும்பிமலையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கை இராணுவம் கைப்பற்றியது அரசியல் நோக்கம் கொண்டது

### இளந்திரையன் பேட்டி

(கிளிநொச்சி)

போரியல் நுட்பம் கொண்ட எந்தவொரு இராணுவத் தலைமையும் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கைகளை மேற்கொள்ளாது என விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தைப் படைகள் கைப்பற்றியுள்ளமை (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ரெலோ அலுவலகம் தாக்கப்பட்டமைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

வவுனியா பண்டாரிக்குளம் அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்துக்குள் படைத்தரப்பினர் பிரவேசித்து தேடுதல் நடத்தியதுடன் அங்கிருந்த இயக்க உறுப் பினர் ஒருவரை சுட்டுக்கொன்றுள்ளதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மிக வன்மையாக கண்டித்துள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு;

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ இயக்கம் ஓர் அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சி. அரசியல் கட்சி அலு வலகத்துக்குள் பிரவேசித்து தேடுதல் என்ற பெயரில் சட்டத்தை தமது கையில் எடுத்துக் கொண்டுள்ளனர் என்பது தெட்டத் தெளிவா கின்றது. இந்த நடவடிக்கையில் இரு குழந் தைகளின் தந்தையான இளைஞர் ஒருவ ரின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் விதிக் கட்டுப்பாட்டுக்கும் கொள்கை உறுதிக் கும் விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகவே இத னைக் கருதவேண்டியுள்ளது. படுகொலை செய்யப்பட்ட ரெலோ உறுப்பினரின் மரணம் தொடர்பாக உண்மை வெளியாகும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

கொலையுண்ட இளைஞர் தியாகராசா வின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தங்க நகையுடன் சென்றவர் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கன்னாதிட்டி வீதியில் நேற்று நண் பகல் ஒரு மணி அளவில் 20 பவுண் நகை யுடன் நகைத் தொழிலாளி ஒருவர் கடத்தப் பட்டுள்ளார்.

ஆட்டோவில் சென்ற மூன்று இனந் தெரியாதோரே அவரைக் கடத்திச் சென்ற தாக உறவினர்களால் யாழ். மனித உரி மை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் யாழ்.பெருமாள் கோயிலடி யைச் சேர்ந்த செல்லையா சிறிசுதாகர் (வயது 19) என்ற நகைத்தொழிலாளியே கடத்தப்பட்டார் என உறவினர்களால் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இராணுவத் தளபதி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி சரத்பொன்சேகா யாழ்ப்பாணத்திற்கு அவசர பயணம் மேற் கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வந்த சரத்பொன்சேகா அங்கு இராணுவ உயர் தளபதிகளை சந்தித்து கலந்துரையாடி யுள்ளார்.

இக் கலந்துரையாடலில் சரத்பொன்சேகா ஆலோசனைகளை வழங்கியதாக இராணு வத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இரண்டு இளைஞர்கள் பொலிஸில் சரண்

(யாழ்ப்பாணம்)

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளதாகத் தெரிவித்து பருத்தித்துறையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் யாழ்.மனித உரி மைகள் ஆணைக்குழு ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த இரு இளைஞர்களும் நேற்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டனர். இருவரையும் விசாரணை செய்த நீதிவான் இ.த.விக்னராஜா,அவர்களை எதிர் வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார். (ச-5)

# சி.சு.க.மக்கள் பிரிவு-ஐ.தே.கவுக்கிடையில் 19ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு எதிர்வரும் 19 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடவுள்ளது. நாட்டின் எதிர்காலநலனை முன்னிட்டு மிகவும் பரந்துபட்ட வகையில் இந்த ஒப்பந்தம் அமையும்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணையாமல் நாட்டில் பொதுக் கூட்டணியை அமைக்க முடியாது என்று சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளரும் முன்னாள் அமைச்ச ருமான மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறி னார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

நாங்கள் ஐக்கிய தேசியக்கட்சியுடன் மிக வும் பரந்துபட்ட வகையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை செய்துகொள்ள வுள்ளோம். எதிர்காலத்தில் நாங்கள் இணைந்துசெயற்படுவோம். ஜே.வி.பியும் எம்முடன் இணைந்து செயற்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் ஏனைய கட்சிகளுடனும் பொதுக் கூட்டணி குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றோம். விரைவில் சாதகமான பதில்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின் றோம். இந்த அரசாங்கத்திடம் நாட்டில் சமா தானத்தை ஏற்படுத்துவதற்கு எந்தவிதமான சாத்தியமும் இல்லை.

நான் கடந்த 14 வருடங்களாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை விமர்சித்தேன் என்பதற்காக எதிர் காலத்தில் அவருடன் இணைந்து செயற்பட முடியாது என்று அர்த்தமில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க 47 இலட்சம் வாக்குளை பெற் றவர். ஐ.தே.க.ஒன்றுமே செய்யாமல் அனைத்து தேர்தல்களிலும் 35 சதவீத வாக்கு வங்கியை கொண்டுள்ள கட்சியாக உள்ளது.

எனவே எந்தவொரு கூட்டணியாக இருந் தாலும் அதில் ஐக்கிய தேசியக்கட்சி இருக்க வேண்டும். தற்போது எனது தந்தைக்கு எதி ராக பிரசாரம் செய்யப்படுகின்றது. எனது தந் தை சொந்த வீட்டில்லாத வீடமைப்பு அமைச்ச ராக இருந்தவர்.

அவர் இறக்கும்போது அவரது வங்கிக் கணக்கில் 90 ரூபாவே இருந்தது. ஊடகவி யலாளர்களை முடக்கும் சட்டமூலம் ஒன்றுக் காகவே அவர் சுதந்திரக் கட்சியை விட்டு விலகினார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் தந்தை டீ.ஏ.ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியிலி ருந்து பல்வேறு காரணங்களுக்காக மாறிய வர். 1988 ஆம் ஆண்டு இடம் பெற்ற சர்வ ஜன வாக்கெடுப்பின்போது பசில் ராஜபக்ஷ ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆதரவாக செயற் பட்டவர் என்றார். (ச-5)



யூனியன் அஷ்யுரன்ஸ் லிமிட்டெட் காப்புறுதி நிறுவனத்தினால் வாடிக்கையாளர் ஒருவருக்கு அதி உச்ச இழப்பீட்டுத் தொகை காசோலையினை யாழ்.பிராந்திய முகாமை யாளர் சி.என்.மதிவதனன் வழங்குவதையும் காப்புறுதி நிறுவன உத்தியோகஸ்தர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்:- கரரைநகர் செய்தியாளர்)

## பின்னுறுதித் தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

டாக்டர் மகாதேவன் நிரஞ்சன்
தம்பைமடு மாவட்ட வைத்தியசாலை,
மன்னார் வீதி,வவுனியா.

வழக்காளி

வழ. இல.மண நீக்கம்/683

எதிராக

நிரஞ்சன் வனஜா
இல.421 ,பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

-எதிராளி

இவ் வழக்கு 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிலி அணைத்த சட்டத்தரணி திரு.மு.திருநாவுக் கரசு அவர்களின் பதிலி மன்றின் கட்டளைப்படி நீக்கப்பட்டு சட்டத்தரணி திரு.பி.ஜே.அன்ரனி அவர்களின் பதிலி அணைக்கப்பட்டு திரு. பி.ஜே. அன்ரனி அவர்களும் பிரசன்னமாயிருக்க மன்றின் கட்டளைப்படி உத யன் தேசிய தினசரிப் பத்திரிகையில் பிரசுரித்தல் மூலம் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை 19.09.2006 பதில் சேவகம் செய்யப்பட்டு 29.09.2006 ஆம் திகதி எதிராளி மன்றில் சமுகமின்மையால் இவ் வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் பதிவு பெற்ற சட் டத்தரணி பி.ஜே.அன்ரனி அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதி கோரி மன்றின் அனுமதியுடன் வழக் காளியின் சாட்சியத்தையும் வழக்காளியின் தந்தையாரான துரையப்பா மகாதேவனின் சாட்சியத்தையும் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் மன்றில் அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படி எதிராளியினால் 2004 ஆம் ஆண்டு மே,யூன் முதல் வன்ம உறவறுப்பு என்ற குற்றம் புரியப்பட்டு வருகிறது என்பது தொடர்பில் இந் நீதிமன்றத்தை திருப்திப்படுத்தும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளமையால் இக் குற்றம் புரியப்பட்டது நிரூ பிக்கப்பட்டதாக இந் நீதிமன்றம் கருதி பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழங்காளிக்கும் எதிராளிக்கும் இடையிலான 08.02.2004 இல் நடைபெற்ற பதிவுத் திருமணம் இத்தால் இரத்துச்செய்து கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி எதிராளிக்கு நேரடியாகவோ அல்லது பத்திரிகையில் பிரசுரம் செய்து பதில் சேவகம் செய்யப்பட்டோ சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதி ராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத்தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித்தீர்வையானது முற்றான தீர் வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

**2006-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் திகதி**

*வரைந்தது*
*வழக்காளியின் சட்டத்தரணி.*

*மேலதிக மாவட்ட நீதிபதி*
*திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்*
*யாழ்ப்பாணம்*

நீதிமன்ற கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்,யாழ்ப்பாணம்.

(184)

# தனியாள் அரங்க நிகழ்வு

அரங்க செயற்பாட்டின் ஊடாக வளமான தேச அபிவிருத் தியை கட்டியெழுப்பும் எண்ணக்கருவோடு யாழ்ப்பாணத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நாடக அரங்க துறையில் சிறப் பாக சேவையாற்றிக்கொண்டு இருக்கிறது.

இந் நிறுவனம் அரங்க செயற்பாட்டின் மூலம் சிறுவர்,பெண் களின் உள சமூக மேம்பாட்டிற்காக முன்நின்று உழைக்கிறது.

நாடக துறையில் ஆர்வம் உள்ளவர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் திறமைகளை உலகிற்கு வெளிப்படுத்துகிறது. இதன் ஓர் அங்கமாக அதன் நிறைவேற்று இயக்குநர் தே.வேதா னந்த் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் 'ஏகம் அனேகம்' என்னும் தலைப்பில் தனியாள் அரங்க நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் குழந்தை ம.சண்முகலிங்கம் கலந்து சிறப் பிக்கவுள்ளார். நாடக ஆர்வலர்கள்,மாணவர்கள் அனைவரை யும் கலந்து கொள்ளுமாறு செயல்திறன் அரங்க இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# பரங்கிக்காய் சாப்பிட்டால் இன்சுலின் ஊசியே வேண்டாம்!

பரங்கிக்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் சர்க்கரை நோயாளிகள் தினமும் இன்சுலின் ஊசி மருந்து போட்டுக்கொள் ளத் தேவையில்லை என்றும் மருத்துவ நிபுணர்கள் கூறியுள் ளனர். இது குறித்து சீன மருத்துவ நிபுணர்கள் கூறியதாவது; சர்க்கரை நோயாளிகள் தங்களின் நோய்ப் பாதிப்பை குறைத்துக் கொள்ள இன்சுலின் ஊசி மருந்தை தினமும் போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பரங்கிக்காயிலுள்ள சத்துக்கள் மூலம் இன்சுலின் உற்பத் தியை சீராக்கமுடியும். இன்சுலின் சுரக்கும் சுரப்பிக்குக் காரண மாக இருப்பது பீற்றா செல்கள்தான். அந்த செல்கள் பழுதுபட்டு இருப்பதால்தான் இன்சுலின் சுரப்பது குறைகின்றது.

பரங்கிக்காயை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பீட்டா செல் பழுது நீங்கி சீராகி விடும். அதன் மூலம் இரத்தத்தில் இன்சு லின் அளவு அதிகரிக்கும். சர்க்கரை நோயில் உள்ள எலிகளைப் பிடித்து அவற்றின் உடலில் பரங்கிக்காய் சத்துக்களை ஏற்றி னோம். அந்த எலிகளுக்கு இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுத் தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

எலிகளில் 30 நாட்களுக்கு இந்த சோதனை நடத்தப்பட்டது. 12 ஆரோக்கியமான எலிகள் 12 சர்க்கரை நோய் பாதிக்கப்பட்ட எலிகளும் இந்த வகையில் சோதனை நடத்தப்பட்டது. அதில் வேறுபாடுகளை நாங்கள் ஆராய்ந்தோம்.

பரங்கிக்காய் சாப்பிட்டு வருவதால் 36 சதவீத அளவு இன்சு லின் உற்பத்தி அதிகரிக்கிறது. இவ்வாறு சீன மருத்துவ நிபுணர் கள் கூறியுள்ளனர். இந்தியாவில்தான் அதிக அளவில் பரங்கிக் காய் உணவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் தென் மாநிலங்களில் தான் அதிகமாக மக்கள் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்கின்றனர். இந்தக் கண்டுபிடிப்பு சர்க்கரை நோயாளிகளுக்கு வரப்பிரசாதம். (ச-5)

# வழிகாட்டல் கருத்தரங்கு

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவன இளைஞர் சேவா நிறுவன இளைஞர் சபை யினரால் நடத்தப்படும் உயர்தர மாணவர் களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங் கில் இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் த.பாலகிருஷ்ணன் வணிகக்கல்வி தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளார். (ச)

# பிற்போடப்பட்டுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூ ரியில் இன்று நடைபெறவிருந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள் ளார். (அ-52)

# 'அகக் கோலங்கள்' வேடமுகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் மாணவர்களினால் நடாத்தப் படும் அகக்கோலங்கள் என்ற வேடமுகங்க ளின் கண்காட்சி எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறும்.

நுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பான வெறுவெளி அரங்கக்குழு இக் கண்காட்சியினை ஒழுங்கு செய்துள்ளது. (ச)

# சிப்தொற சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி சிப்தொற புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கை லாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட 269 மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்க வுள்ளார்.

சமுர்த்தி நலன்பெறும் வறிய குடும்பங் களில் உள்ள இரண்டாம் நிலைக் கல்வி பெறுகின்ற மாணவர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச)

# சனி மாற்றம் உங்களுக்கு எப்படி



## சிங்கம்

சனிபகவான் உங்களின் விரய ராசியிலிருந்து ஜன்ம ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். இந்தக் காலகட்டம் ஏழரை சனியின் மத்திய பாகமாகும். இது சற்று எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் இருக்க வேண்டிய சமயமாகும்.

மனதில் ஒருவித பயம் குடிகொண்டிருக்கும். உங்கள் செயல்களை உடனுக்குடன் பொறுப்புடனும், பொறுமையுடனும், நிதானத்துடனும் செய்து முடிக்கவும். அவசர புத்தி கூடாது. பேராசைகள் இல்லாமல் நேர்வழியில் நடத்தலே சிறந்ததாகும்.

உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். குறிப்பாக கால், கைகளில் குடைச்சல், மூட்டு வலி போன்றவை உண்டாகும். சிலருக்கு இருதய நோய் உண்டாகலாம்.

உங்கள் சேமிப்பை மூலதனமாகப் போட்டு எதையும் முயற்சிக்க வேண்டாம். குடும்பத்தில் உள்ளவர்களிடம் விட்டுக் கொடுத்து அனுசரித்து நடந்துகொள்ளவும். வாகனங்களில் செல்வோர் எச்சரிக்கையுடன் இருக்கவும். ஏனெனில் தலையில் அடிபட வாய்ப்புண்டு.

மேலும் சிலர் கடன்கள் வாங்க நேரிடலாம். தவிர நீங்கள் சுலபமாகச் செய்துவந்த செயல்கள் அனைத்தையும் அலைந்து திரிந்து பாடுபட்டு முடிக்க வேண்டிவரும். ஜன்ம ராசியில் உள்ள சனி பகவான் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துவிடுவார்.

அதேசமயம் உற்றார் உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு செயல்படமாட்டார்கள். நீங்கள் எதிர்பார்த்த தொகை உங்களுக்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நீங்கள் கொடுத்த கடனைத் திரும்பப் பெற, நடையாய் நடக்க வேண்டிவரும். அதனால் எச்சரிக்கையுடன் உங்கள் பொருளாதார நிலையைக் கவனிக்கவும்.

இவ்வளவு கடினமான சூழலை சனி பகவான் ஏற்படுத்தினாலும், பாபக்கிரகங்களுக்கு கேந்திர ஸ்தானங்களில் அதிக பலம் உண்டாகும் என்கிற ஜோதிட கூற்றுப்படி சனி பகவான் ஜன்ம ராசியான கேந்திரத்தில் அமர்ந்துள்ளதால் உங்கள் செயல்களை எப்பாடுபட்டாவது முடித்துவிடுவீர்கள். மனதில் எதிர் நீச்சல் போடும் உறுதி உண்டாகும். அஞ்சா நெஞ்சன் என்று பெயர் எடுப்பீர்கள். உங்களின் வைராக்கியத்தைக் கண்டு எதிரிகளும் அஞ்சுவார்கள். புதிய செலவினங்கள் ஏற்பட்டாலும் பலவிதங்களில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முனைவீர்கள்.

சனி பகவானின் பார்வை தைரிய ஸ்தானத்தின் மீது படுவதால், உங்கள் முயற்சிகளில் முழு ஆற்றலை வெளிப்படுத்துவீர்கள். புதிய கடன்கள் வாங்கும் நிர்ப்பந்தமான சூழலிலும் தளராது பாடுபடும் களைப்பு அறியா மனத்தை சனி பகவான் வழங்குவார்.

சனி பகவானின் ஏழாமிடப் பார்வை உங்களின் வாழ்க்கைத் துணையும், நண்பர்களும் உங்களைப் புரிந்துகொள்ள உதவும். சனி பகவான் உங்கள் ராசிக்கு பத்தாம் இடமான தொழில் ஸ்தானத்தைப் பார்வையிடுவதால் உங்கள் வேலைகளில் பெரிய இடையூறுகள் உண்டாகாது.

மேலும் தொழிலில் திறமைகள் முழுமையாக வெளிப்படும். உத்தியோகஸ்தர்கள் உற்சாகமான மனநிலையோடு அலுவலக வேலைகளில் ஈடுபடுவார்கள். அதேசமயம் மனதைச் சஞ்சலப்படுத்தும் சக ஊழியரை விட்டு விலகுங்கள்.

மற்றப்படி மேலதிகாரிகளின் அன்பும் ஆதரவும் தொடருவதால் கவலை வேண்டாம். அலுவலக ரீதியான பயணங்களில் பண வரவு உண்டாகும். உங்கள் ஞாபக சக்தியில் சிறு குறைகள் வர வாய்ப்பு உள்ளதால் அதைப் பெருக்கிக் கொள்ள தியானம், பிராணயாமம் போன்றவைகளைச் செய்யவும்.

வியாபாரிகள் கடன் கொடுத்து வியாபாரத்தைப் பெருக்கும் எண்ணங்களைத் தள்ளி வைக்கவும். அயராது பாடுபட்டு உழைத்து வருமானம் ஈட்டவும். அனைத்து விஷயங்களிலும் நேரடியான கவனத்தைச் செலுத்துவது அவசியம். கூட்டாளிகளை முழுமையாக நம்பி உங்கள் போக்கில் சென்றால் ஏமாற்றங்களும், நஷ்டங்களும் ஏற்படும். சிலர் வம்பு வழக்குகளையும் சந்திப் பார்கள்.

விவசாயிகளுக்கு விவசாயம் நன்றாக இருந்தாலும் பணப்பற்றாக்குறை ஏற்படும். நிலத்தை அடமானம் வைத்துக் கடன் பெறுவதை முடிந்தவரைக்கும் ஒத்திப்போடவும். அதேநேரம் பழைய கடன்கள் வசூலாக புதிய குத்தகைகளை நன்றாக யோசித்து எடுக்கவும். நீர்ப்பாசன வசதிகளுக்கு சற்றுக் கூடுதலாக செலவு செய்ய வேண்டிவரும். கையிருப்புப் பொருட்களைத் தக்க வைத்துக்கொள்ள அரும்பாடுபட வேண்டிவரும்.

அரசியல்வாதிகள் சிறிது மன அமைதியின்மையையும், வீண் அலைச்சல்களையும் சந்திக்க நேரிடும். எதிர்க்கட்சியினர் நீங்கள் செய்யும் தவறுகளைக் கவனித்து வருவார்கள். சரியான நேரத்தில் உங்களை அவமரியாதையும் செய்வார்கள். அதே நேரம் கட்சி மேலிடமும், தொண்டர்களும் உங்களுக்கு அனுசரணையாக இருப்பார்கள். முகம் தெரியாதவர்களால் இக்கட்டான நேரத்தில் உதவிகளைப் பெறுவீர்கள்.

இந்த ராசி கலைத்துறையினர் பொருளாதாரத்தில் அபிவிருத்தியைக் காண்பார்கள். எடுத்த காரியங்களில் முன்னேற்றம் உண்டாகும். புதிய ஒப்பந்தங்களைத் தேடிச் சென்று பெறுவார்கள். சக கலைஞர்கள் போட்டி, பொறாமையின்றி உங்களிடம் திறந்த மனதுடன் பழகுவார்கள். தெளிவான மனநிலையோடு உங்கள் செயல்களைச் செய்வீர்கள். கடன் வாங்கும் நிலைமை உண்டாகாது.

பெண்மணிகளைப் பொறுத்தவரை குடும்பத்தில் அனுகூலமான நிலைமைகளைக் காண்பார்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கைகள் உண்டாகும். உற்றார், உறவினர்களுடன் இணக்கமான உறவை கூட்டிக் கொள்வீர்கள். கணவர் மனைவியிடையே சுமுகமான உறவு நீடிக்கும்.

மாணவ மணிகளின் படிப்பில் சிறிது தடங்கல் ஏற்பட்டாலும், பெற்றோரின் உதவியுடன் முடித்து வெற்றிபெறுவீர்கள். அதேசமயம் உள்ளரங்கு விளையாட்டுகளில் மட்டுமே ஈடுபடவும். சோம்பேறித்தனத்தைத் தள்ளி வைத்து பாடங்களை உடனுக்குடன் படித்து முடித்து மதிப்பெண்களை அள்ளுங்கள். உடற்பயிற்சிகளையும், யோகா போன்றவைகளையும் மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

## வருடாந்தக் கூட்டம்

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.எஸ்.ஏகாம்பர நாதன் தலைமையில் நடைபெற்றது. அங்கு தெரிவுசெய்யப்பட்ட நடப்பு வருட நிர்வாகிகளின் விபரம் பின்வரு மாறு,

தலைவர் வீ.எஸ்.ஏகாம்பரநாதன், உப தலைவர்கள் -எம்.தயாபரன், எஸ்.யோகநாதன், செயலாளர்-எம்.சிவலிங்கம், உபசெயலாளர் -எஸ்.இரத்தினவடிவேல், பொருளாளர் -எஸ்.இராஜேந்திரா, உப பொருளாளர் - கே. மனோகரன். அத்துடன் 13 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (அ-52)

## கால்நடைகளுக்கான தீவனம்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான தீவன வகைகள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தினூடாக வழங்கப்பட்டு வருகின்றன.

கால்நடை வைத்திய அதிகாரியின் சிபார்சின் பேரிலேயே இக்கால்நடைத் தீவனங்களான வளர் குஞ்சுத் தீவனம், முட்டைத் தீவனம், மாட்டுத் தீவனம் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. வளர் குஞ்சுத் தீவனம் கிலோ 60 ரூபாவிற்கும், முட்டைத்தீவனம் கிலோ 55 ரூபாவிற்கும், மாட்டுத்தீவனம் கிலோ 45 ரூபாவிற்கும் வழங்கப்படுவதாக அறி விக்கப்பட்டுள்ளது. (அ-52)

## பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை நகரசபை பிரதேசத்தில் உள்ள தேநீர்ச்சாலைகள், உணவகங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பரிசோதனை செய்யப்பட்டு சுகாதார முறையுடன் நுகர்வோருக்குச் சிறந்த சேவைகளை வழங்கும் தேநீர்ச்சாலைகள், உணவகங்களுக்குபருத்தித்துறை நகரசபையால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை நகரசபையால் பொது நூலகத்தில் வாசகர்களின் நன்மைகருதி நூல் கண்காட்சியை நடாத்துதல், நகரசபைப் பிரதேசத்தில் உள்ள தாய், சேய் பராமரிப்பு நிலையங்களில் உள்ள பாலூட்டும் தாய் மார்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கல், பருத்தித்துறை சிவன் ஆல யத்திற்கு அருகாமையில் உள்ள புராதன கால தெரு மூடிமடம் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய் தல், சுப்பர்மடம் வெள்ள வாய்க்கால் சிரமதானம் மூலம் திருத்திபுனரமைத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக பருத்தித் துறை நகரசபை செயலாளர் ஏ.நடராஜா தெரிவித்துள்ளார். (அ-52)

## கிழக்கில் இராணுவத்தினர் பெற்ற வெற்றி இனத்தின் வெற்றி என்கிறது ஹெல உறுமய

கிழக்கு மாகாணத்தை படையினர் தங்களது முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளமை இனத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

இந்த வெற்றியின் மூலமாக பிரபாகரன் கனவு கண்டு கொண்டிருந்த தமிழீழத்தின் தலைநகரான கிழக்கு அவரிடமிருந்து கை நழுவிவிட்டது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட படையினருக்கும் அரசாங்கத்திற்கும் நாட்டு மக்கள் பாரிய பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்பதனால் வெற்றியை வடக்கிற்கு திசை திருப்புவதற்கு படையினருடன் கைகோர்க்க வேண்டும் என்றும் ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து ஜாதிக ஹெல உறுமய விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்டதிலிருந்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான மனிதாபிமான நடவடிக்கைகளினால் கிடைத்த பெறுபேறுகளுக்கு ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர் தொப்பிக் கலையை படையினர் கைப்பற்றியமை படையினருக்கும் இனத்திற்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

விசேடமாக மாவிலாறு அணைக்கட்டை திறப்பதற்கு தலைமையேற்று கிழக்கில் புலிகளுக்கு எதிராக முதலாவது துப்பாக்கி வேட்டை தீர்த்த அன்றே படையினர் புலிகளை கிழக்கிலிருந்து வெளியேற்றிவிட்டனர். கிழக்கு மாகாணம் தொடர்பாக பிரபாகரன் சிறு அளவான எதிர்பார்ப்பை வைத்திருக்கவில்லை.

ஈழத்தின் தலைநகரமாகவே கிழக்கை மதிப்பிட்டிருந்தார். இன்று அந்தக் கனவும் கைநழுவி சென்றுவிட்டது. படையினரின் நட வடிக்கைகளினால் புலிகள் திக்குத் தெரியாமல் ஓடிவிட்டனர். படையினரின் இந்த நடவடிக்கைகளுக்காக நாமெல்லாம் கடன்பட்டுள்ளோம்.

கிழக்கில் படையினர் பெற்ற வெற்றியை குறைத்து மதிப்பிடுவதற்கோ அல்லது வெளிநாட்டு சக்திகளி னால் விமர்சிப்பதற்கோ நாம் ஒருபோதும் இடம் வழங்கக்கூடாது. (அ-5)

## கருத்தரங்கு

தென்மராட்சி பாடசாலைகளில் தரம் 6இல் சைவசமயம் கற்பிக் கும் ஆசிரியர் களுக்கு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சைவசமயம் சம்பந்தமான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தரம் 6 ற்கு சைவசமய பாடம் கற்பிக் கும் ஆசிரியர்களை தவறாது கலந்து பயன்பெறுமாறு கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (அ)


## இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகங்களில் எழுதுநர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இலங்கை அபி விருத்தி நிர்வாக பணியகத்தால் (**Sri Lanka Institute of Development Administration**) 2007.07.15 ஆம்திகதி (ஞாயிற்றுக்கிழமை) எமது சுன்னாகம் இலங்கை மின்சார சபை அலுவலகத்தில நடாத்தப்படவிருந்த எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக கப்பட்டுள்ளது. இதனால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

பிரதிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்)

பிரதிப் பொது முகாமையாளர்,
வடமாகாண அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
500, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(C/219)




உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய தடகளவிழா நிகழ்வில் முதன்மை நிலை இரண்டு, மாணவர்களின் காவடி நிகழ்வைப் படத்தில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

### அனுபவம்

ஓர் ஊரிலே ஒரு ஞானி இருந்தார். ஒருநாள் அவரைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். வந்தவர் ஞானியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ஐயா! உங்களுடைய சாதனை என்ன? இதைக் கேட்டதும் அந்த ஞானி நிமிர்ந்து இவரைப் பார்த்தார். அப்புறம் சொன்னார்.

"அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. அது ரொம்பவும் எளிமையான ஒன்று. எப்பொழுது எனக்குப் பசிக்கிறதோ அப்பொழுது நான் சாப்பிடுவேன். எப்பொழுது எனக்குத் தூக்கம் வருகிறதோ அப்பொழுது நான் தூங்குவேன். அவ்வளவு தான்"

கேள்வி கேட்டவருக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. "ஐயா! இதைத் தானே நாங்களும் செய்கிறோம். இதிலே என்ன அதிசயம் இருக்கிறது?" என்றார்.

அப்பொழுது அந்த ஞானி சொன்னார் " இங்கேதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள்"... 'அப்படியா?'... என்றார் வந்தவர். 'ஆமாம்' என்றார் ஞானி.

"நீங்கள் செய்கிற தவறு எனக்குப் புரிகிறது. ஏனென்றால் நான் உங்கள் மாதிரியும் வாழ்ந்திருக்கிறேன்... அதனாலே என் அனுபவத்திலே உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசத்தை உணர முடிகிறது..." என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்... எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்றார் வந்தவர். "இதோ பாருங்கள்!... சாப்பிடுவது என்பது எங்கள் இரண்டு பேருக்கும் பொதுவான ஒரு காரியம் தான் . ஆனால் நீங்கள் சாப்பிடுவதற்கும் நான் சாப்பிடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது" என்றார் ஞானி.

"என்ன வித்தியாசம்?"- அவர் கேட்டார்.

"நீங்கள் பசி இல்லாத போது சாப்பிடுகிறீர்கள். இப்பொழுது சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது என்பதற்காகச் சாப்பிடுகிறீர்கள்... சாப்பாடு ருசியாக இருக்கிறது என்பதற்காகச் சாப்பிடுகிறீர்கள்... எது தேவை என்பது தெரியாமல் சாப்பிடுகிறீர்கள்...

அது மாதிரியே தூக்கமும் உங்களுக்கு ஒரு பழக்கமாகப் போய்விட்டது... இப்பொழுது இது தேவையா இல்லையா என்பதை நீங்கள் பார்ப்பதில்லை...

சாப்பிடும்போது ஆயிரம் வேலைகளை மனதிலே நினைத்துக்கொண்டிருப்பீர்கள்... அதனாலே அது 'சாப்பிடுவதாக' இருக்கமாட்டாது.

அதேமாதிரி... நீங்கள் தூங்கும் பொழுது அது 'தூங்குவதாக' இருக்கமாட்டாது. ஏகப்பட்ட கனவுகள் வரும். உங்கள் மனம் மேலும் மேலும் கனவுகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும்.

ஆனால்... எனக்குள்ளே நடப்பது அப்படியல்ல... தூக்க உணர்வு வந்தவுடனே 'தூங்குதல்' மட்டுமே நடைபெறும்" என்றார் அந்த ஞானி.

இப்பொழுது வித்தியாசம் புரிகிறதா? அந்த ஞானி சாப்பிடுவதை அனுபவிக்கிறார். அது Experience .நாங்கள் அப்படி அல்ல... மனம் போன போக்கில் சாப்பிடுகிறோம். இது Indulging.

இது இரண்டிலும் செயலிலே வேறுபாடு இல்லை. விழிப்புணர்விலே தான் வேறுபாடு இருக்கிறது.

அவர் சாப்பிடும்போது ஒரு காட்சி மனோபாவத்தோடு சாப்பிடுகிறார். எவ்வளவு தேவையோ அவ்வளவு சாப்பிடுகிறார். ஏனெனில் அவருடைய விழிப்புணர்வு முழுமையாகச் செயல்படுகிறது. அதனாலே அவர் சாப்பிடும்போது நம்மை விட மகிழ்வாக இருக்கிறார்.

நாம் அப்படி அல்ல. வயிற்றை நிரப்புவதற்காகச் சாப்பிடுகிறோம். இன்னும் சொல்லப்போனால் சாப்பிடும் போது நாம் அங்கே இருப்பதில்லை... எங்கேயோ போய் விடுகிறோம்... உடம்பு மட்டும் தான் அங்கே இருக்கும்.

ஆனால் ஞானி அப்படிஅல்ல. அவர் சாப்பிடும் போது 'சாப்பிடுதல்' மட்டுமே இருக்கும். எந்த ஒரு செயலையும் விழிப்புணர்வுடன் செய்யலாம். மனம் போன போக்கிலும் செய்யலாம். விழிப்புடன் செய்யும் போது செய்யும் செயல் நம் அனுபவமாகின்றது அவ்வளவு தான்.

இதெல்லாம் பெரிய தத்துவம் மாதிரித் தெரிகிறது. இருந்தாலும் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்... எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் முழு ஈடுபாடு வேண்டும் என்பதுதான்.

அந்த அளவுக்கு முதலிலே நம்மை மாற்றிக்கொண்டால் போதும்... ஆனால் நமது ஆட்கள் எல்லோரும் அந்த அளவுக்கு இருப்பதில்லை. எல்லாமே அரைகுறைதான். கேட்டால் ஞாபக மறதி. ஒருவன் விமான ரிக்கட் வாங்கிக் கொண்டு ரயில்வே ஸ்டேசனுக்கு வந்துவிட்டான். அப்புறம் தான் புரிந்தது தவறுதலாக இங்கே வந்துவிட்டோம் என் பது... உடனே அவசரமாக விமான நிலையத்தை நோக்கி ஓடினான்.

அங்கே, கவுண்டரிலே கேட்டான் "நான் தவறுதலாக ரயில்வே ஸ்டேசனுக்கு போய்விட்டேன். அதனால் விமானத்தையும் தவறவிட்டுவிட்டேன். அடுத்த பிளைட்டுக்கு இதனை மாற்றித் தரமுடியுமா?"

'முடியாது' என்றார் கவுண்டரில் இருந்த பெண்மணி.

'ஏன்?' என்று கேட்டான் இவன்.

"ஏனென்றால் இப்பொழுது நீங்கள் வந்திருப்பது பஸ் நிலையம் "என்றார் அந்த அம்மா !...

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இலங்கையில் கண்காணிப்பாளர்களின் செயற்பாடு கைவிடப்பட்ட கப்பலில் பணியாற்றுவதை போன்றது

### மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவிப்பு

இலங்கையில் உண்மையான யுத்த நிறுத்தம் அற்றநிலையில் அதிகரித்துள்ள வன்முறைகளுக்கு மத்தியில் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் செயற்பாடு கைவிடப்பட்ட கப்பலில் பணியாற்றுவதற்கு ஒத்ததாக அமைந்துள்ளது என மேற்குலக இராஜ தந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சோல்வ்பேர்க் அண்மையில் அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதன்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்தும் பேணுவதாக இருதரப்பும் அவரிடம் உறுதியளித்திருந்தனர். இச்சந்திப்பு இடம்பெற்று ஒருவார காலம் ஆவதற்குள் மீண்டும் ஆரம்பித்த கிளேமோர் தாக்குதல்கள், தொடரும் படையினரின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய இராஜதந்திரிகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு தனது உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக அதாவது 30 இல் இருந்து 60ஆக அதிகரிக்க தீர் மானித்துள்ளது. எனினும் சடலங்களையும் குண்டுகளையும் கணக்கிடுவதே தற்போது கண்காணிப்பாளர்களின் பணியாக மாறிவிட்டது. எனவே, கண்காணிப்புக்குழு தனது பணி தொடர்பாகவும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் சமாதான செயற்பாடு ஒன்று நடைபெறுவதை உலகிற்கு காட்ட இருதரப்பும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை பயன்படுத்துகின்றனர்.

மறு பக்கத்தில் ஒப்பந்தத்தில் மாத்திரமே போர் நிறுத்தத்தை காண முடிகின்றது. களநிலைமை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. போர்நிறுத்தத்தை அமுல்படுத்தும் அதிகாரம் இன்றி கண்காணிப்புக்குழு உள்ளது என்று கூறியுள்ளனர். (அ-5)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளை செஞ்சிலுவைச் சங்க 2007 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டம் யாழ்.கிளை கென்றிடுனான்ற் மண்டபத்தில் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலை மையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது. (அ)

## சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் திடீரென விழுந்து மரணமடைந்தார்

### பருத்தித்துறையில் சம்பவம்

கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு காலை சைக்கிளில் சென்றுகொண்டிருந்த செயற்கை முறைச் சினைப்படுத்தல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திடீரென ஏற்பட்ட நோயினால் சைக்கிளால் விழுந்து மரணமானார்.

பருத்தித்துறையில் வசிப்பவரும், புலோலி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பணிபுரிபவருமான அ.நீக்கிலாஸ் யேசுநேசன் (வயது 63) என்பவரே மரணமானவராவார்.

பருத்தித்துறை மந்திகை வீதியால் கடமைக்காகச் சென்று கொண்டிருந்தவேளை ஏற்பட்ட திடீர் நோயினால் அவர் சைக்கிளால் விழுந்தார். வீதியால் சென்றவர்கள் உடனடியாக அவரை மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர்.

இவரது மரண விசாரணைகளை பருத்தித்துறை பதில் நீதிபதி என்.தங்கராசா மேற்கொண்டார். பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டார். (அ-52)

## இராசிபலன்

14.07.2007

(ஆனி 30, சனிக்கிழமை)

அமாவாசை முன்னிரவு 05.35 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 05.04 மணிவரை

இராகுகாலம் 09.00-10.30 மணிவரை

சுபநேரம் 03.00-04.30 மணிவரை

அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | விருந்துபசாரம், மனோதைரியம், கூட்டு முயற்சி, இனிய அனுபவம். |
| இடபம் | மனோசங்கடம், பொருள் விரயம், காரிய தாமதம், வீண்பகை. |
| மிதுனம் | சயனசுகம், பெரியோரால் நன்மை, புதிய முயற்சி, போசனசுகம். |
| கடகம் | உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், சுப செலவு, பிரயாண அலைச்சல். |
| சிங்கம் | நண்பர்கள் சந்திப்பு, புகழ், தொழில் நன்மை, போசன சுகம். |
| கன்னி | உற்சாகம், நன்கொடை, பெரியோர் உதவி, புதிய திருப்பம். |
| துலாம் | உத்தியோக பங்கம், பொருள் விரயம், வீண்பயம், வயிற்றுக்கோளாறு. |
| விருச்சிகம் | வாகனபயம், பொருள் விரயம், செய் தொழில் முடக்கம், தர்மம். |
| தனுசு | மனோதைரியம், கலந்துரையாடல், சயன சுகம், தொழில் விருத்தி. |
| மகரம் | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், உடல்நலம், தொழில் முன்னேற்றம். |
| கும்பம் | மனக்கவலை, வேலைச்சுமை, சிறு வியாதி, முயற்சி தாமதம். |
| மீனம் | கல்வியில் ஆர்வம், உறவினர் சந்திப்பு, மனச்சஞ்சலம், தனவிரயம். |

- வளவன்

## கல்லூரி நாடகங்கள் நூல் வெளியீட்டு விழா

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் பா.இரகுவரனின் "கல்லூரி நாடகங்கள்" நூல் வெளியீட்டுவிழா பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் ஹாட்லிக்கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவிலே பிரபல எழுத்தாளர் தெணியான் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். நூல் அறிமுகவுரையை மேலைப் புலோலி சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் என்.கனகலிங்கமும், நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் த.கலாமணியும் நிகழ்த்துவர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவரும் இலங்கை வங்கியின் வடபிராந்திய இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளருமான கே.பாலசுப்பிரமணியம் நூல் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் கே.திலகநாதன், ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர்களான ஜெ.சந்திரப்பிரகாசம், செல்வி.கே.நமசிவாயம், ஆங்கில விரிவுரையாளர் ஏ.கந்தையா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்துவார்கள். நூலாசிரியர் இரகுவரனின் பதிலுரையையடுத்து ஹாட்லி ஆசிரியர் கே.பாலகெங்காதரன் நன்றியுரை நிகழ்த்துவார். (அ-52)

## காரைநகரிலிருந்து விறகு

காரைநகரிலிருந்து பூவரசு, மஞ்சள் வண்ணா, கொய்யா, இலந்தை என்பன கொத்து விறகாக மட்டும் கொண்டு செல்ல திங்கள், புதன் கிழமைகளில் மட்டும் அனுமதிக்கப்படும் என காரைநகர் உதவி அரசாங்கஅதிபர் ஆர்.ரீ.ஜெயசீலன் தெரிவித்துள்ளார். (அ)

## கருத்தரங்கு

யாழ். அரச சார்பற்ற இணையம் நடாத்தும் கருத்தரங்கு ஒன்று 4ஆம் குறுக்குத் தெருவிலுள்ள தமிழர் அகதிகள் புனர் வாழ்வுக் கழக மண்டபத்தில் திருமதி ஜெகதீசன் தலைமையில் 16ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் யாழ்.குடாநாட்டில் உள்ள பெண் அமைப்பாளர்கள் கருத்துரை வழங்குவர் என இணையத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (அ)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

வல்வை கணபதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பி.ப.1.00 மணிக்கு கணபதி படிப்பக உப தலைவர் பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் கு.அமிர்தலிங்கம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.எஸ்.ஏ.ஜபார், கிராம அலுவலர் மு.கந்தசாமி , வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர் திருமதி கு.நகுலாம்பிகை , வடமராட்சி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ்.சுரேஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

பொய்கள் ஈக்கள் போல் இரைகின்றன. ஆனால் சத்தியத்தில் சூரியப்பிரகாசம் உண்டு.

—ஆபிரிக்கா

வலம்புரி

## சர்வதேசத்தை ஏமாற்றும் மகிந்தவின் அரசியல் காய்நகர்த்தல்

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தயாராக இருப்பதாக உலக நாடுகளிடம் கூறிவந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உள்ளார்ந்த எண்ணம் இப்போது வெளிப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வென்பது எக்காலத்திலும் சாத்தியமாகாதென்பது நிரூபிக்கும் வகையில் அரசின் யுத்த நகர்த்தல்கள் அமைந்துள்ளன.

உலக நாடுகளிடம் உதவியைப் பெறுவதற்காக 'சர்வகட்சிக் குழுக்கூட்டம்' என்ற மாயை தோற்றத்தை உருவாக்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதன் மூலம் தீர்வுத்திட்டத்தை எட்டமுடியும் என்ற நம்பிக்கையை உலக நாடுகளிடம் ஏற்படுத்தினார்.

தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படுகிறது என்றவுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகிட்டிவிட்டது என எளிதாக நம்பிவிடும் உலக நாடுகள் இலங்கைக்கான உதவியை தாராளமாக வழங்கும்.

இதுவே கடந்த கால யதார்த்தம். ஆனால் இறுதிமுடிபு வெறும் புஷ்வாணமே. இந்த உண்மையை உணர்ந்துகொள்வதில் உலக நாடுகள் இடையே தெளிவான விளக்கம், அக்கறைத் தனம் இன்மையால் இன்றுவரை இலங்கை அரசுகள் சர்வதேச சமூகத்தை ஏமாற்றி வருகின்றன.

இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் வியூகம்-காய் நகர்த்தல் வித்தியாசமானது. சர்வகட்சிக்குழுக்கூட்டத்தை ஏற்பாடு செய்துவிட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டது.

இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக் கூட நிவர்த்திக்க முடியாதவாறான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத்திட்டம் என்பது உலக நாடுகளை மாத்திரமன்றி ஈழத்தமிழர்களையும் ஏமாற்றுவதாகவும் உள்ளது.

அதாவது, இலங்கைத் தமிழர்களுக்கான தீர்வென்பது இதுதான். இதைத் தவிர வேறு எதையும் வழங்க முடியாது என அத் தீர்வுத்திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

எனவே இலங்கையில் பெரும்பான்மை இனம் சார்ந்த மக்கள்-அரசியல் கட்சிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியே மிக மோசமானது என்ற முடிபை அக் கட்சி முன்வைத்த தீர்வுத்திட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இப்போது சர்வகட்சிக் குழுக்கூட்டம் செயலிழந்து செல்லும் தறுவாயில் இருக்கின்ற அதே நேரம், யப்பானைத் தனது கைக்குள் போட்டுக்கொண்டு இராணுவ நடவடிக்கையை அரசு முன்னகர்த்துகிறது.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பிரசாரம் செய்து உலக நாடுகளில் அந்த அமைப்பைத் தடைசெய்து விட்டு அந்த நாடுகளைத் தூக்கி எறியும் இலங்கை அரசின் செயல் மிகப் பயங்கரமானதாகும்.

அதாவது; இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாகவும் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் கூறுகின்ற போது, உலக நாடுகள் எமது பிரச்சினையில் தலையிடத் தேவையில்லை. அவற்றின் நிதியுதவியும் எங்களுக்குத் தேவையில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியதும்;

அவரின் வித்தியாசமான-ஏமாற்று வித்தை கொண்ட அரசியல் காய்நகர்த்தலாக உள்ளது. இதற்கெல்லாம் யப்பானிய அரசின் நிதி உதவியும் பக்கபலமுமே காரணம் ஆகும்.

எதுவாயினும் ஓர் அரசு தனது கடமையைச் செய்யத் தவறும்போது அதன் விளைவு அழிவென்பதை மகிந்தவின் அரசும் புரிந்துகொள்ளவில்லை என்பதே உண்மை.

# பாதுகாப்பு செயலருடன் கடத்தல் தொடர்பில் கைதான கஜநாயக்கவுக்கு தொடர்பு

## ஆதாரங்கள் உள்ளன என்கிறார் சிறிபதி எம்.பி.

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள கடத்தல்களுடன் தொடர்புள்ளதாக சந்தேகிக்கப்படும் நிசந்த கஜநாயக்க பாதுகாப்புச் செயலாளருடன் தொடர்பு பட்டுள்ளார். அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. இந் நிலையில் நாட்டில் இடம் பெறும் கடத்தல்கள் மற்றும் கப்பம் பெறல் போன்ற சம்பவங்களுடன் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தொடர்புள்ளதா? என்ற சந்தேகம் எழுகின்றது என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் இணைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான சிறிபதி சூரியாராச்சி தெரிவித்தார்.

சிங்களப்புலிகளின் தலைவர் எனக்கூறப்படும் சியாமல் எனப்படுபவர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரிலேயே அரசாங்கத்திலிருந்து நான் விலகுவதற்கு முன்னர் என்னைக் கொலை செய்ய முயற்சித்ததாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வீடியோக் காட்சிகள் எம்மிடம் இருக்கின்றன என்றும் அவர் கூறினார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

தற்போது கடத்தல் மற்றும் கப்பம் பெறல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் நிசந்த கஜநாயக்க என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஐ.தே.கவின் எம்.பி. லக்ஷ்மன் செனிவிரட்ண வெளியிட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்தகைது இடம் பெற்றுள்ளது. ஆனால் இந்த கஜநாயக்க என்பவர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தொடர்புபட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு ரணில் விக்கிரமசிங்க நிதி வழங்கினார் என்று நான் எப்போதும் கூறவில்லை. ஆனால் முன்னாள் ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாச புலிகளுக்கு நிதியும் ஆயுதங்களும் வழங்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பசில் ராஜபக்ஷ புலிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் நானும் கலந்து கொண்டேன் என்றார். (ச-5)

# குடும்பிமலையைத் தக்கவைப்பதற்கு 20 ஆயிரம் இராணுவத்தினர் தேவை

## எங்கிருந்து பெறப்போகிறார்கள் என மங்கள சாடல்

(கொழும்பு)

குடும்பிமலையைத் தக்கவைக்க தேவைப்படும் 20 ஆயிரம் இராணுவத்தினர் எங்கே உள்ளனர்? கொழும்பு மற்றும் யாழ்.குடாவிலிருந்து இராணுவத்தினரைப் பயன்படுத்தப்போகிறீர்களா? என்று ஜனாதிபதிக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுத்தலைவர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது; இராணுவத்தினரின் நடவடிக்கை பாராட்டத் தக்கது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமோ திட்டமிட்ட முறையில் இந்தப்போரை நடத்தவில்லை.

இராணுவத்தினரின் இழப்புகளுக்கு ஏற்ப அவர்கள் போரை வடிவமைக்கவில்லை. குடும்பிமலையைத் தக்கவைக்க 10 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரை இராணுவத்தினர் தேவையென்று முன்னாள் வான்படைத் தளபதி கரிகுணத்திலக தெரிவித்துள்ளார்.

எனவே அந்தப்பிரதேசத்தில் இராணுவ பலத்தை தக்கவைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் என்ன திட்டத்தைக் கொண்டுள்ளனர். கொழும்பு மற்றும் யாழ்.குடா போன்றவற்றில் உள்ள இராணுவத்தினர் இதற்கு பயன்படுத்தப்படுவார்களா? கோத்தபாய மேன்மையானவர் என்ற வாசகங்கள் கொழும்பில் தற்போது காணப்படுகின்றன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே பாதுகாப்பு அமைச்சின் பிரதம அதிகாரி. ஆனால் அவர் ஒருபோதும் தொலைக் காட்சிகளில் நடைபெறும் அரசியல் கலந்துரையாடல்களில் அரசின் சார்பில் முன்னர் கலந்து கொள்ளவில்லை.

ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ மேன்மையானர் எனத் தற்போது எழுதப்பட்டுள்ளதானது, ஒரு ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகும். குடும்பிமலையைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் தாமதமடைவது தொடர்பாக இராணுவத் தளபதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் சாடியிருந்தார்.

குடும்பிமலை கைப்பற்றப்படுவதற்கு முன்னரே அதனைக் கொண்டாட மகிந்த நாள் குறித்திருந்தார். எனவே குடும்பிமலையைக் கைப்பற்றிவிட்டதாக யூலை 11 ஆம் திகதி அறிவித்தது திட்டமிட்ட ஒன்றாகும்.

குடும்பிமலை மீதான இராணுவ நடவடிக்கையை பெரிதான வெற்றியாக்கி தனது அரசியல் வறுமையை அதற்குள் மறைக்க மகிந்த முற்படுகிறார். இந்த நடவடிக்கை அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இந்த வெற்றி இழக்கப்படலாம் என்றார் மங்கள. (ச-5)

# குடும்பிமலையைக் கைப்பற்றியது மரங்களை வெட்டுவதற்கு அல்ல

## ரணிலுக்கு ஊடக அமைச்சர் பதில்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பயிற்சிக்களமான குடும்பிமலையை கைப்பற்றியது மரங்களை வெட்டுவதற்காக அல்ல. அங்கு மக்களின் மனங்களை வென்றெடுக்க வுள்ளோம் என்று ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தற்கொலைக் குண்டுதாரிகளுக்கு குடும்பிமலையில் தான் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் வடக்கிற்கும் கிழக்கிற்கும் அனுப்பப்பட்டனர். கொழும்பில் பல்வேறு கரும்புலித் தாக்குதல்களை நடத்தியவர்களுக்கு குடும்பிமலையில்தான் பயிற்சி அளிக்கப்பட்டது.

அத்தகைய குடும்பிமலையில் விறகுவெட்டுவதற்காகவே இராணுவத்தினர் இன்று கைப்பற்றியுள்ளனர் என்று கூறுவது வேடிக்கையாகும் என அவர் கூறினார். நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சந்திரிகா மீதான கரும்புலித்தாக்குதலை நடத்தியவர் குடும்பிமலையில் இருந்து வந்தவர்தான். குடும்பிமலையில் இருந்து புலிகள் பின்வாங்கியதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது.

இராணுவத்தினர் நடத்திய பல்குழல் பீரங்கித் தாக்குதலுக்கு முகம்கொடுக்கமுடியாமலேயே புலிகள் அங்கிருந்து பின்வாங்கினர். கொழும்பில் புலிகள் வான் தாக்குதலை நடாத்தியபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரினார்கள்.

ஆனால் இப்போது அவர் குடும்பிமலையை மீட்டுள்ளார். அப்படியானால் அவரை பதவியில் தொடர்ந்து இருக்குமாறு அவர்கள் கூறுவார்களா? என அவர் கேள்வி எழுப்பினார். (எ-1)

## பாலாமை வைத்திருந்தவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடலில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட பாலாமையொன்றை காரில் கொண்டு வந்தவரை மானிப்பாய் பொலிஸார் நேற்று நவாலியில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸாரால் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். சட்டவிரோதமாக பாலாமையைப் பிடித்து வந்தவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் சரோஜினி இளங்கோவன் குறித்த பாலாமையை மீண்டும் கடலில் சேர்க்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதேவேளை குறித்த பாலாமை 50 ஆயிரம் பெறுமதியானது என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சி.டி.எம்.ஏ.விண்ணப்பத்துடன் தொழில் சான்றை இணைக்கவும்

### அரசாங்க அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ இணைப்பை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி தனது தொழில் சான்றை இணைத்து விண்ணப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ்வாறு தொழில் சான்றை இணைத்து வழங்கும் போது முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்பிற்கான அனுமதியை விரைவாக பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குறிப்பிட்ட அளவு தொலைபேசி இணைப்புகளையே வழங்க முடியும் என்பதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அரச அதிபர் எதிர்காலத்தில் அனைவருக்கும் சி.டி.எம்.ஏ தொலைபேசி இணைப்பு வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (ச -5)

# [illegible]

[illegible]

## ஜேர்மன்...

பாகவும் ஜேர்மன் தூதுவர் சில அறிக்கைகளை விட்டிருந்தார். ஜேர்மன் தூதுவரின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை நடத்த நாடாளுமன்றப் பொறுப்புக் குழு அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தால் அரசாங்கம் அதனைப் பரிசீலிக்கும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி தொடர்பான ஆவணங்களை ஜேர்மன் தூதுவர் அண்மையில் இலங்கை அரசாங்கத்திடம் கையளித்தபோது அது தொடர்பில் சாதகமான பதில் எதனையும் மகிந்த அரசாங்கம் தெரிவிக்கவில்லை என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## தாய்லாந்தி...

தாய்லாந்திலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் தொலைபேசி இலக்கமான 066 2288 2230 உடன் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் கோரியுள்ளனர். (ச)

## [illegible] இராணுவம்...

முற்றுமுழுதாக அரசியல்நோக்கம் கொண்ட…

வை. அதில் இராணுவ முக்கியத்துவம் எதுவும் கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார். ஜனாதிபதியும் படைத்தளபதிகளும் கூறுவது போன்று கிழக்கைப் போல் வடக்கையும் கைப்பற்றி விடலாம் என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பல வருடங்களாக வடக்கை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கில் மிகப் பெரும் எடுப்பில் படைகள் ஆரம்பித்த யுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ள[illegible]

எனவே அர்ப்படைகள் நிலைவுக்கு வரவேண்டும் கிழக்குப் போல் அல்லாது வடக்கின் கள நிலைமைகள் முற்றிலும் மாறுபாடானது. அரச படைகள் தீர்மானிக்கும் திசையில் யுத்தத்தின் போக்கு அமையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் அரசியல் தீர்வில் அக்கறையற்று அமைதி முயற்சிகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் அக்கறை கொண்டுள்ளதையே அளம்பில் தாக்குதல் எடுத்துக் காட்டுவதாகவும் அவர் கூறியுள்ளார். (எ-5)

## முல்லைத்...

வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து [illegible] தாக எதிர்பார்க்கிறது.

[illegible] புலிகளின் பயிற்சி முகாம்கள் மற்றும் மீளைப்பட்ட ஆயுத தளபாடங்கள் என்பவற்றையும் அவர்கள் பார்[illegible] (எ-5)

## [illegible] பேச்சுக்கு தயாரில்லை...

[illegible] விடுதலைப்புலிகள் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் தயாரில்லை

மில்லை என்றும் விடுதலைப்புலிகள் கருதுவதாக நோர்வேத் தூதுவர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமைகளை மீறி வருவதோடு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் மதிக்காமல் செயற்பட்டு வருவதாகவும் இவ்வாறான நிலையில் பேச்சுவார்த்தைகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும் தமிழ்ச்செல்வன் கூறியதாக நோர்வேத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கி வரும் நிதியுதவிகள் மூலம் யுத்த நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகக் குற்றஞ்சுமத்தியுள்ள தமிழ்ச்செல்வன், அரசாங்கம் யுத்த நடவடிக்கைகளைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் பிரயோகிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளதாகவும் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார். (ச-5)

## பதுவாவி...

படுவான்கரையில் கச்சைக்கொடி சுவாமி மலைப் பகுதியில் மாணிக்கப்போடி சிவலிங்கம் என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை புழுக்குணாவக் குளத்திற்கு கடந்த 10 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றார். அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அப் பகுதியில் மீள் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் மீளவும் இடம் பெயர்ந்துள்ளன. (ச)

## [illegible]

சூரியாராச்சி தெரிவித்து வரும் கருத்துக்கள் உண்மையில்லை. வெளிநாட்டுக்கு [illegible] னங்களை வழங்குவதற்காக உலக[illegible] துறை கேட்டுக் கொண்டதன் பேரிலேயே 28 உரிமங்கள் வழங்கப்பட்டன என்றார்.

குடும்பிமலை தொடர்பாக [illegible] ரமசிங்க தெரிவித்த கருத்து இராணுவத்தின[illegible]

குடும்பிமலை பிரதேச அபிவிருத்திக் [illegible] பணியில் ஆறு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்படும் 14 ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியேற்றப்படவுள்ளன என்றார் அமைச்சர் ஜெயராஜ். (ச-5)

தனது கிளிநொச்சி விஜயம் குறித்து அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக்குழுத் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நோர்வேத் தூதுவர் விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்த[illegible]

## [illegible] வீதியில் நேற்று...

இளைஞன் உறவினருடன் கடந்த புதன்கிழமை பாஷையூர் குருநகர் பகுதிக்கு மீன் வாங்கச் சென்ற போது அப்பகுதியில் நடைபெற்ற சுற்றிவளைப்பின்போது இராணுவத்தினரால் அவ்விளைஞனின் அடையாள அட்டை பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவ் அடையாள அட்டையை நேற்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொண்டு தனது சிறிய தாயாருடன் வீடு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொல்லப்பட்ட இளைஞன் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாகத் தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து யாழ்.சிறைச்சாலையில் மூன்று மாதங்கள் தடுப்புக் காவலில் இருந்தவர் என்றும் பின்னர் சுயவிருப்பில் வெளியில் வந்தவர் என்றும் விசாரணைகளில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை சம்பவ இடத்திற்குச் சென்று மேற்கொண்ட யாழ்ப்பாண நீதிவான் லிங்கா துரைராஜா பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலை [illegible] யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## [illegible] தாக்குதல்...

சேதவிபரங்கள் குறித்து [illegible]

[illegible]


**SATS - TECH வழங்கும் அதிரடி தள்ளுபடி விற்பனை!!!**



சன்டீவி/ சன் நியூஸ்/ ஜெயா டீவி/ கே டீவி உட்பட 40ற்கும் மேற்பட்ட சானல்கள் Ku band System Rs. 7000/=.

1.65 cm Sats Tech டிஸ் அன்ரனா -ரூபாய் 2000/=
2.61cm Arisat டிஸ் அன்ரனா -ரூபாய் 3250/=
3.65cm EuRostar டிஸ் அன்ரனா -ரூபாய் 3750/=
4.Ku band LNBF -ரூபாய் 750/=
5.[illegible] (Digital) -ரூபாய் 4000/= இல் இருந்து
6.NOVATECH 550 MHZ அம்பிளிபயர் -ரூபாய் 3000/=
7.NOVATECH 750 MHZ அம்பிளிபயர் -ரூபாய் 3500/=

மற்றும் அனைத்து கேபிள் T.V உபகரணங்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு
SATS-TECH ENGINEER
[illegible] வீதி,
[illegible] அருகில்)
Phone:- விற்பனை- 021 222 5908

Ku BAND மற்றும் C Band System ரூபாய் 8000/= மட்டுமே

❖உங்கள் கேபிள் T.V. தொழிலை தீர்க்கமான தொழில் நுட்ப முறைப்படி Fibre offical அல்லது Digital தொழில் நுட்பத்திற்கு மாற்றிக் கொள்ள விரும்புகின்றீர்களா? தீர்வு எங்கள் வசம்...

❖கேபிள் T.V. மற்றும் செய்மதி தொலைக்காட்சி உபகரணங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்ய இலங்கை அரச அனுமதி பெற்ற நிறுவனமான எமது Sats - Tech நிறுவனம் உங்கள் தொழிலில் ஏற்படும் சுப்ரீதியான பிரச்சினைகளுக்கும் தேவைப்படும் ஆலோசனைகளை வழங்கத் தயாராகவுள்ளோம்.

விற்பனை மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைக்கு:- 077 7710785


[illegible] அவர்களது அச்சகத்தில் 14.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.